WWW.KALVIKURAL.COM

பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–600 009.

**கடிதம் எண்.23339/பக5(2)/2016–4, நாள் 15.12.2017.**

அனுப்புநர்
திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்,
பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6.

ஐயா,

பொருள் : பள்ளிக் கல்வி – அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் – பகுதி நேரத்தில் உயர்கல்வி M.Phil. / Ph.D., பயில அனுமதி கோரிய கருத்துருக்களுக்கு விரைவு நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வழங்குதல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

பார்வை : 1 அரசு கடிதம் எண்.23339/பக5(2)/2016, நாள் : 24.10.2016, 04.05. 2017 மற்றும் 19.09.2017.
2. தங்களது கடித ந.க.எண்.96036/சி5/ இ3/2015, நாள்.24.10.2016, 19.12.2016, 19.01.2017,22.07.2017(ம) 06.10.2017.

*******

பார்வையில் காணும் கடிதங்கள் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2) பார்வை 2ல் காணும் தங்கள் கடிதங்களில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொலைதூரக் கல்வி வாயிலாக உயர் கல்வி பயில துறைத் தலைவரின் முன் அனுமதி பெறுவது தொடர்பாக அரசாணை எண்.328, பணியாளர் (ம) நிருவாக சீர்த்திருத்தத்துறை, நாள் 09.04.1983 மற்றும்அரசு கடித எண்.356, பள்ளிக் கல்வி, நாள் 02.11.2007 உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்றும் தற்போது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் துறைத் தலைவரின் முன் அனுமதி பெறாமல் துறையின் முன் அனுமதியின்றி உயர்கல்வி பயின்றுள்ளமைக்கு பின்னேற்பு வழங்குமாறு கோரியுள்ளீர்கள்.

2) அரசு கடிதம் (1டி) எண்.356, பள்ளிக் கல்வி, நாள் 02.11.2007ல் தலைமை ஆசிரியர் மற்றும் முதுகலை ஆசிரியர்கள் பலரும் துறையின் அனுமதியின்றி உயர்கல்வி பயின்றுள்ளனர் என்ற நிலையினை கருத்திற்கொண்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் முன்அனுமதி இன்றி இதுகாறும் உயர்கல்வித் தகுதி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்கள் பொருட்டு சிறப்பு நிகழ்வாகக் கருதி பின்னேற்பு வழங்கியும், எனினும் இது போன்ற நிகழ்வுகள் இனிவருங்காலங்களில் ஏற்படாத வண்ணம் கவனத்தில் கொள்ளுமாறும், துறைத் தலைவரின் முன்அனுமதி பெற்றே உயர்கல்வி பயில வேண்டும் என்பதையும், தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்த நேரிடும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

WWW.KALVIKURAL.COM



3) மேலே தெரிவிக்கப்பட்ட நிலையில் தற்போது அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் துறைத் தலைவரின் முன் அனுமதி பெறாமல் துறையின் முன் அனுமதியின்றி உயர்கல்வி பயின்றுள்ளமைக்கு மீண்டும் ஒரு விலக்களிப்பு / விதிவிலக்கு / பின்னேற்பு கோரும் தங்களது கருத்துரு தீவிர பரிசீலிக்கப்பட்டதன் அடிப்படையில் அதனை ஏற்கயிலாது என்றும் அக்கருத்துரு நிராகரிக்கப்படுகிறது என்பதனை தங்களுக்கு தெரிவித்திட பணிக்கப்பட்டுள்ளேன்.

தங்கள் நம்பிக்கையுள்ள

18-12-17

அரசு முதன்மைச் செயலாளருக்காக.